**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு M. சந்திரமோகன், B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் தைத் திங்கள் 21ம் நாள்
2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04–ம் நாள் புதன்கிழமை
*****

**அசல் வழக்கு எண். 63/2012ல் இடைமனு எண்.2/2025**

1. கிருஷ்ணம்மாள் (இறந்தார்)
2. இராமகிருஷ்ணன் சார்பாக அவரின் அதிகாரம் பெற்ற முகவர் சுவாமிநாதன் மூலம்
3. சீத்தா .....மனுதாரர்கள்/வாதிகள்

...எதிர்....

1. பாலசுந்தர்
2. பாபு ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 27.01.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டிருந்தும் கடந்த 02.04.2012 அன்று திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, வாதுரை பேச கெடு போடப்பட்டுள்ளதை Re open செய்யகோரி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு உ.வி.மு.ச.151–ன் படி மனு தாக்கல்

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.04 17:52:07 +0530

செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

(i) மனுதாரர் அசல் வழக்கில் 2ம் வாதி ஆவார். அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி வழக்குத் தொடரப்பட்டு, விசாரணைக்கு வந்து, வாதுரை பேச 10-11-2025 அன்று கெடுபோடப்பட்டிருந்த நிலையில் மனுதாரர்கள்/வாதிகளால், அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியின் தந்தை பெயர் தவறாக குறிப்பிடப்பட்டு, போலி ஆவணம் தயார் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் இந்த வழக்கை நடத்தி வருகிறார்கள் என்றும், 2ம் பிரதிவாதியின் தந்தை பெயர் சின்னையன் என்றும், தவறாக சிவா என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அதனை நிரூபணம் செய்யவதற்காக, 2ம் பிரதிவாதி படித்த வடகால் ரஹ்மாணியா உயர்நிலைப்பள்ளியின் மாற்று சான்றை வரவழைத்து தாக்கல் செய்ய வேண்டி வழக்கை Re-open செய்ய வேண்டியது அவசியம் என்றும், இல்லாவிடில் மனுதாரர்களுக்கு ஏராள கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும் என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :**

(i) இந்த வழக்கில் வாதிகள், பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் விசாரிக்கப்பட்டு, முடிக்கப்பட்டுவிட்டது என்றும், தற்போது வாதுரைக்காக கெடு போடப்பட்டுள்ள நிலையில் வாதி தரப்பு சாட்சியத்தை Re-open செய்ய வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், வழக்கை Re-open செய்ய சரியான காரணமும் கூறாமல் மனுவுடன் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யாததால், வழக்கை Re-open செய்ய இயலாதென்றும், ஆவணங்களையும் ஏற்றுக்கொள்ள இயலாதென்றும், எனவே மனுவை 1ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.04 17:52:13 +0530

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

3. மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்கள்/வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5. தீர்வு:</u>**

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது இரு தரப்பு சாட்சியமும் முடிக்கப்பட்டு, வாதுரைக்காக கெடு போடப்பட்டுள்ள இந்நிலையில், மனுதாரர்கள்/வாதிகளால் 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியின் தந்தை பெயரை தவறாக குறிப்பிட்டு, ஆள்மாறாட்டம் செய்து பிரதிவாதிகள் வழக்காடி வருவதாகவும், அதனை நிரூபிக்கும் விதமாக 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி படித்த பள்ளியின் மாற்றுச் சான்றை தாக்கல் செய்ய வேண்டி வழக்கை Re–Open செய்ய கோரி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் தரப்பினர்களின் சாட்சிய விசாரணை முடிக்கப்பட்டு வழக்கறிஞர்களின் வாதுரைக்காக போடப்பட்டுள்ள நிலையில் தாவா வழக்கை Re open செய்ய கோரியுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், மேலும் மனுதாரர்கள் மனுவுடன் எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததாலும், வழக்கை Re open செய்ய சரியான காரணம் கூறாததாலும், மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

(iii) அசல் வழக்கில் இருதரப்பிலும் சாட்சிய விசாரணை முடிக்கப்பட்டு வழக்கறிஞரின் வாதுரைக்காக வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.04 17:52:19 +0530

இருப்பினும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. இதனால் வழக்கின் விசாரணை எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதார்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும், எதிர்மனுதாரர்களுக்கு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பிருப்பதாலும், தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.04 17:52:26 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | - இல்லை - |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | - இல்லை - |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | - இல்லை - |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | - இல்லை - |

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.04 17:52:37 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**நேரிய/வரைவு உத்தரவு**
அசல் வழக்கு எண்.63/2012
இடைமனு எண்.2/2025
நாள்.04.02.2026